**வீதி வலையமைப்பு முன்னேற்ற முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் - 2 - 2017**

வீதி வலையமைப்பு முன்னேற்ற முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் - 2 இன் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சீன அபிவிருத்தி வங்கிக் கூட்டுத்தாபனத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 மார்ச் 31 ஆந் திகதிய 4500062212011110472 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சாகவிருந்த தற்போதைய நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. முன்னுரிமை வீதியின் 619.72 கிலோமீற்றர்களை முன்னேற்றம் செய்து மீளமைத்தல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 61,438 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 556 மில்லியனானதுடன் இதில் ரூபா 55,250 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 500 மில்லியன் சீன அபிவிருத்தி வங்கிக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2011 ஜூன் 28 இல் தொடங்கியிருந்ததுடன் 2014 ஜூன் 28 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. இருப்பினும் கடன் காலம் மீளளிப்புக்காலம் முடிவடையும் வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கபட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட மீளப்பெறல் விண்ணப்பங்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஒதுக்கீடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2017 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| சீடிபீ | 500.00 | 55,250.00 | 370.00 | 2.43 | 369.01 | 499.99 | 64,511.01 |
| இலங்கை அரசாங்கம் | 56.00 | 6,188.00 | 200.00 | - | 47.00 | - | 7,090.02 |
| ஆர்டிஏ-என்எஸ்பி | - | - | - | - | - | - | 1,100.29 |
| சம்பத் வங்கி கடன் | - | - | - | - | 1,804.61 | - | 1,804.61 |
| | **556.00** | **61,438.00** | **570.00** | **2.43** | **2,220.62** | **499.99** | **74,505.93** |

**3.2 பௌதீக முன்னேற்றம்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட ஆவணங்களின் பிரகாரம், நுவெரெலியா மற்றும் ஹம்பாந்தோட்ட மாவட்டங்களிலுள்ள தேசிய வீதிகளின் 504.90 கிலோமீற்றர்கள் மற்றும் மாகாணவீதிகளின் 85.00 கிலோமீற்றர்களை புனரமைத்தல், 02 மேம்பாலங்களை நிர்மானித்தல் மற்றும் முன்னுரிமை அடிப்படையில் 46 பாலங்களை அகலப்படுத்தல் மற்றும் மீள்நிர்மானம் செய்தல் என்பன 2014 ஒக்டோபர் 20 அளவில் பூர்த்தியாக்க திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், தேசிய வீதிகளின் 514.10 கிலோமீற்றர்கள் மற்றும் மாகாண வீதிகளின் 105.62 கிலோமீற்றர் என்பவற்றின் புனரமைப்பு, 02 மேம்பாலங்களின் நிர்மான வேலைகள் மற்றும் 71 பாலங்களின் மீள்நிர்மான வேலைகள் என்பன பூர்த்தியாக்க பட்டியலிடப்பட்டிருந்த திகதியிலிருந்து 07 மாதங்கள் தாமதத்துடன் 2015 மே 15 அளவில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மேலும், இறுதி கொடுப்பனவுகள் ஒப்பந்ததாரரினால் தாக்கல் செய்யப்பட்ட நடுவர் தீர்ப்பு வழக்கின் காரணமாக 2017 திசெம்பர் 31 வரை தீர்க்கப்படாமல் காணப்பட்டது. அதன் பெறுபேறாக, செயற்திட்டமானது ஊழியர் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய நிர்வாக நடவடிக்கைகள் மீது 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முறையே 21.91 மில்லியன் மற்றும் 12.26 மில்லியன் மேலதிக கிரயங்களை செலவிட்டிருந்தது.

(ஆ) 2014 செப்டம்பர் 15 மற்றும் 2015 ஜூன் 22 இல் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்ட முறையே பதுளை – கரமெடிய – அந்துல்பொத்த வீதி மற்றும் தென்னங்கும்பர – ரிகில்லகஸ்கட – ராஹல வீதியின் புனரமைக்கப்பட்ட பகுதிகள் 2014 திசெம்பரில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக சேதமடைந்து காணப்பட்டதுடன் மீள் நிர்மானத்திற்கான புதிய ஒப்பந்தம் வழங்கப்பட்ட கடனிற்கு வெளியாக ரூபா 131.91 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தங்களின் கீழான மீள்நிர்மான வேலைகள் 2017 திசெம்பர் 31 வரை கூட பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 வழமைக்கு மாறான நடவடிக்கைகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாற்றல் கட்டளைகள் மற்றும் நிதிமன்ற சபையின் நிர்மானத்தின் மீதான அடிப்படையிலான நடுவர் தீர்ப்பு என்பன மீது எழுந்த கிரயங்களை கொடுத்து தீர்ப்பதற்காக 02 உள்நாட்டு அனுமதி பெற்ற விசேட வங்கிகளிடமிருந்து மேலதிக கடன்களை பெற வீதி அபிவிருத்தி அதிகார சபையானது நடவடிக்கை எடுத்திருந்தது. இருப்பினும், கடனை கொடுத்து தீர்ப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையால் செய்யப்பட்ட ஏற்பாடுகள் கணக்காய்விற்கு விபரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உண்மை ஒப்பந்தப் பெறுமதியில் பொதுவாக உள்ளடக்கப்பட்டிருந்த காப்புறுதி பெட்டகை மீதான கிரயங்களை எதிர்கொள்வதற்கு நீர்கொழும்பு – கிரியுள்ள வீதியின் புனரமைப்பில் ஈடுபட்டிருந்த ஒப்பந்ததாரரிற்கு மொத்தமாக ரூபா 1.7 மில்லியன் மீளாய்வாண்டின் போது மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(இ) ரூபா 54.60 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தினால் பெறுகை செய்யப்பட்ட நடைமுறை அல்லாச் சொத்துக்கள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. மேலும், செயற்திட்டமானது செயற்திட்டத்தினால் பெறுகை செய்யப்பட்ட சொத்துக்களை பதிவு செய்வதற்கு நிலையான சொத்து பதிவேடொன்றை பராமரித்திருக்கவில்லை.